அனுப்புநர்
திரு.த.ஆபிரகாம்,
சமூக நல ஆணையர்,
சமூக நல ஆணையரகம்,
பனகல் மாளிகை, சைதாப்பேட்டை,
சென்னை – 15.

பெறுநர்
அனைத்து மாவட்ட சமூக நல
அலுவலர்கள்.

<u>ந.க. எண். 38864 /ம.ந.2(2)/2019, நாள். 13 .12 .2019</u>

பொருள்: சமூக நலம் – மகளிர் நலம் – பெண்களின் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவை புரிந்தவருக்கு 2019 – 2020ஆம் ஆண்டில் உலக மகளிர் தினவிழாவில் அவ்வையார் விருது வழங்க – கருத்துரு அனுப்ப கோருதல் சார்பு.

பார்வை: அரசாணை(நிலை) எண். 36, சமூக நலம் (ம) சத்துணவு திட்டத்(சந3) துறை, நாள்.20.03.2012.

--------

உலக மகளிர் தின விழா ஆண்டு தோறும் மார்ச் 8ல் கொண்டாடப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் 2012 முதல் மகளிர் தின விழா கொண்டாட்டத்தின்போது, பெண்களின் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவை புரிந்த ஒருவருக்கு அவ்வையார் விருது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதுக்கு ரொக்கப்பரிசு, தங்க பதக்கம், சான்று மற்றும் சால்வை வழங்கப்படும்.

இவ்வாண்டிற்கான உலக மகளிர் தின விழா 08.03.2020ஆம் நாளன்று கொண்டாடப்படும்போது, அவ்வையார் விருது வழங்கப்படவுள்ளதால், அனைத்து மாவட்ட சமூகநல அலுவலர்களும் கீழ் குறிப்பிட்ட விதிமுறைகளின் படி கருத்துக்களை பெற்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தினை முழுமையாக பூர்த்தி செய்து, தகுதியான கருத்துருக்களுக்கு மட்டும் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையுடன் 31.12.2019–க்குள் தவறாமல் இவ்வாணையரகத்திற்கு அனுப்புமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

<u>2020–ம் ஆண்டு அவ்வையார் விருது வழங்கும் பொருட்டு கருத்துருக்கள் அனுப்புவதற்கான விதிமுறைகள்:</u>

- தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டவராகவும், 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

- சமூக நலனைச் சார்ந்த நடவடிக்கைகள், பெண் குலத்திற்கு பெருமை சேர்க்கும் வகையிலான நடவடிக்கை, மொழி, இனம், பண்பாடு, கலை, அறிவியல், நிர்வாகம் போன்ற துறைகளில் மேன்மையாக பணிபுரிந்து மக்களுக்கு தொண்டாற்றும் வகையில் தொடர்ந்து பணியாற்றுவராக இருத்தல் வேண்டும்.

- கருத்துருக்களை பத்திரிக்கை செய்தியுடன் இவ்வாணையரகத்திற்கு அனுப்ப வேண்டும்.

**<u>கையேட்டில் (Booklet) இணைக்கப்பட வேண்டியவை:</u>**

1. பொருளடக்கம் மற்றும் பக்க எண்.
2. உயிர் தரவு (Bio data) மற்றும் passport size photos – 2.
3. மாவட்ட ஆட்சியரின் பரிந்துரை கடிதம்.
4. மாவட்ட சமூக நல அலுவலரின் பரிந்துரை கடிதம்.
5. சுயசரிதை.
6. ஒரு பக்கம் தனியரை பற்றிய விவரம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்)– Soft Copy and Hard Copy).
7. தேசிய மற்றும் உலகளாவிய விருதுகளின் விவரம் (விருது பெற்றிருப்பின் அதன் விவரம்/ விருதின் பெயர் / யாரிடமிருந்து பெற்றது மற்றும் பெற்ற வருடம்).
8. சேவை பற்றிய செயல்முறை விளக்கம் புகைப்படங்களுடன்.
9. சேவை பாராட்டி பத்திரிக்கை செய்தி தொகுப்பு.
10. சேவை ஆற்றியதற்கான விரிவான அறிக்கை.
11. சமூக சேவையாளரின் / சமூக சேவை நிறுவனத்தின் சேவை மூலமாக பயனாளிகள் பயனடைந்த விவரம்.
12. தொண்டு நிறுவனத்தின் பதிவு, உரிமம், ஆண்டறிக்கை .
13. சமூகப் பணியாளர் இருப்பிடத்தில் அருகில் உள்ள காவல் நிலையத்திலிருந்து பெறப்பட்ட குற்றவியல் நடவடிக்கைகள் ஏதும் இல்லை என்பதற்கான சான்று
14. இணைப்பு – படிவம் (தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்) முழுமையாக பூர்த்தி செய்து Soft Copy and Hard Copy) அனுப்ப வேண்டும்.
15. கையேடு (Booklet) - தமிழ் (ம) ஆங்கிலத்தில் அச்சு செய்யப்பட்டு தலா 2 நகல்.

மேலே குறிப்பிட்டுள்ள விதிமுறைகளின்படி உரிய முறையில் பெறப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் எனவும், சரியான கருத்துருக்களை தேர்வு குழு மூலம் சரிபார்க்கப்பட்டு இவ்வாணையரகத்திற்கு அனுப்பி வைக்கவும். அனைத்து மாவட்ட சமூக நல அலுவலர்கள் வெற்றறிக்கை அனுப்புவதை கட்டாயம் தவிர்க்கவும். இவ்விருதுக்கு ரொக்கப்பரிசு, தங்க பதக்கம், சான்று மற்றும் சால்வை வழங்கப்படும். அவ்வையார் விருது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படும் என்ற விவரம் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : படிவம்

ஒம்/–த.ஆபிரகாம்,
சமூக நல ஆணையர்

//ஆணைப்படி//

16/12/19
சமூக நல ஆணையருக்காக

16/12/19

## அவ்வையார் விருது 2019–20ஆம் ஆண்டிற்கு பெயர் பரிந்துரை செய்யும் படிவம்

| வ. எண் | பெயர் மற்றும் மாவட்டம் (திரு / திருமதி) | கைபேசி எண் | பிறந்த தேதி (ம) வயது | கல்வித் தகுதி | தற்பொழுது பணிபுரியும் தொண்டு நிறுவனத்தின் பெயர் மற்றும் பதவி | விருது பெற்றிருப்பின் அதன் விவரம்/ விருதின் பெயர் / யாரிடமிருந்து பெற்றது மற்றும் பெற்ற வருடம் | மகளிர் முன்னேற்றத்திற்காக பணிபுரிந்த வருடங்கள் | பெண்களின் முன்னேற்றத்திற்காக பணிபுரியும் சேவைகளின் விவரங்கள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் (ஒரு பக்க அளவில் கட்டாயமாக தனியாக இணைக்க வேண்டும்) | கருத்து வேறுபாடு இல்லாத /அரசியல் சாராத, மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையுடன் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

## PROFORMA FOR RECOMMENDING WOMEN FOR AVVAIYAR AWARD FOR 2019-20

| S.No | Name & District | Mobile No. | Date of Birth & Age | Educational Qualification | Name of the NGO at present and Designation | Awards received, if any, name of award, received from which organization & when | No. of years of service rendered for development of women | Details of services rendered for the development of women (details attach with one page write up in separate sheet) | Non controversial / Non political with specific recommendation of Collector |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

ஒம்/–த.ஆபிரகாம்,
சமூக நல ஆணையர்

//ஆணைப்படி//

16/12/19

சமூக நல ஆணையருக்காக

# அவ்வையார் விருது 2019 – 20

## (ஒரு பக்க விவரம்)

| | | |
|---|---|---|
| பெயர் | : | |
| பிறந்த தேதி மற்றும் வயது | : | |
| பணிபுரியும் பதவியின் பெயர் | : | |
| நிறுவனம் | : | |
| ஒரு பக்கம் தனியரை பற்றிய விவரம் | | |

# Avvaiyar Award 2019 – 20

## (One Page writeup)

| | | |
|---|---|---|
| Name | : | |
| Date of Birth & Age | : | |
| Designation | : | |
| Institution | : | |
| Details about the nominee in one page. | | |

ஒம்/–த.ஆபிரகாம்
சமூக நல ஆணையர்

//ஆணைப்படி//

சமூக நல ஆணையருக்காக